ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| --- | --- |
| திகதி | 27.02.2015 |

## 2015 பெப்புருவரியில் பணவீக்கம் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டவாறான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட மாற்றங்களின் மூலம் அளவிடப்பட்டவாறான பணவீக்கம் (2006/07 = 100) ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2015 பெப்புருவரியில் 0.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து 2004 பெப்புருவரிக்குப் பின்னரான ஆகக் குறைந்த மட்டத்தினைப் பதிவு செய்தது. 2015 பெப்புருவரியில் ஆண்டுச் சராசரிப் பணவீக்கமும் சனவரியில் பதிவு செய்யப்பட்ட 3.2 சதவீதத்திலிருந்து 2.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.



2015 பெப்புருவரியில் கொ.நு.விலைச் சுட்டெண்ணின் அதன் முன்னை மாதத்துடன் ஒப்பிடுகையில் 2.3 சதவீதத்தினால் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது. இம்மாதச் சுட்டெண்ணில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 2015 சனவரி காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட எரிபொருள் விலைகளின் கீழ்நோக்கிய திருத்தம் மற்றும் 2015 வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளவாறான உணவு மற்றும் உணவல்லாப் பொருட்கள் இரண்டினதும் விலை/ இறக்குமதி தீர்வையின் வீழ்ச்சி என்பனவே அதிகளவில் பங்களித்தன. உணவல்லா வகையினிடையே திரவ எரிபொருள், எல்பி வாயு மற்றும் பேருந்துக் கட்டணங்கள் என்பனவற்றின் விலைகள் கணிசமானளவு வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளன. இம்மாத பணவீக்கத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, அரிசி மற்றும் அநேக வகை மீன் மற்றும் காய்கறிகள் போன்ற உணவுப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் உதவப்பட்டது. எனினும், இம்மாத காலப்பகுதியில் முட்டை, தேங்காய், பழங்கள் மற்றும் சிலவகைக் காய்கறிகளின் விலைகள் அதிகரிப்பினைப் பதிவு செய்தன.

உணவல்லா வகையினிடையே வீடமைப்பு, நீர், மின், வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் மற்றும் போக்குவரத்து ஆகிய துணை வகைகள் கணிசமானளவு வீழ்ச்சியடைந்து, அண்மைய கீழ்நோக்கிய நிர்வகிக்கப்பட்ட விலைத் திருத்தங்களின் தாக்கத்தினைப் பிரதிபலிக்கினற வேளையில் புடவை மற்றும் காலணி துணை வகைகளின் விலைகள் அதிகரித்தன. எனினும், தளபாடம், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் வழமையான வீட்டுப்பேணல்; சுகாதாரம்; தொலைத்தொடர்பூட்டல்; பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம்; கல்வி மற்றும் பல்வகைப் பொருட்கள் மற்றும் பணிகள் ஆகிய துணைத் துறைகள் மாற்றமடையாது காணப்பட்டன.

பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தினைக் குறிக்கும் மையப் பணவீக்கம் 2015 பெப்புருவரியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2015 சனவரியின் 2.1 சதவீதத்திலிருந்து 0.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2015 பெப்புருவரி காலப்பகுதியில் ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் 2015 சனவரியில் பதிவு செய்யப்பட்ட 3.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 3.2 சதவீதமாகக் காணப்பட்டது.